N08/2/ABTAM/SP1/TAM/TZ0/XX/T

88082433

International Baccalaureate®
Baccalauréat International
Bachillerato Internacional

**TAMIL B – STANDARD LEVEL – PAPER 1**
**TAMOUL B – NIVEAU MOYEN – ÉPREUVE 1**
**TAMIL B – NIVEL MEDIO – PRUEBA 1**

Tuesday 4 November 2008 (morning)
Mardi 4 novembre 2008 (matin)
Martes 4 de noviembre de 2008 (mañana)

1 h 30 m

---

TEXT BOOKLET – INSTRUCTIONS TO CANDIDATES

- Do not open this booklet until instructed to do so.
- This booklet contains all of the texts required for Paper 1.
- Answer the questions in the Question and Answer Booklet provided.

LIVRET DE TEXTES – INSTRUCTIONS DESTINÉES AUX CANDIDATS

- N’ouvrez pas ce livret avant d’y être autorisé(e).
- Ce livret contient tous les textes nécessaires à l’épreuve 1.
- Répondez à toutes les questions dans le livret de questions et réponses fourni.

CUADERNO DE TEXTOS – INSTRUCCIONES PARA LOS ALUMNOS

- No abra este cuaderno hasta que se lo autoricen.
- Este cuaderno contiene todos los textos para la Prueba 1.
- Conteste todas las preguntas en el cuaderno de preguntas y respuestas.



© International Baccalaureate Organization 2008

Blank page
Page vierge
Página en blanco

## பனுவல் A

### வாழ்வைச் சீர்குலைக்கும் வரதட்சணை

❶ இன்றைய காலகட்டத்தில் வரதட்சணை கேட்பது அவசியம்தானா? இந்தக் கேள்வியை எத்தனை தமிழர்கள் தங்கள் மனத்தில் எழுப்புகிறார்கள். வரதட்சணை என்னும் ஒரு சம்பிரதாயம் நம் இந்தியக் கலாசாரத்தில் குடிகொண்டிருப்பதால், என்னென்ன கொடுமைகள் நிகழ்கின்றன. இதனை எதிர்த்துப் பல நூற்றாண்டுகளாகச் சான்றோர்கள் குரலெழுப்பி வந்தும், மக்கள் திருந்தியபாடில்லை.

❷ பண்டைக் காலத்தில் திருமண பந்தத்தில் இணையும் இரு குடும்பங்களுக்கிடையே புரிந்துணர்வையும் நெருக்கத்தையும் ஏற்படுத்தப் பல சடங்குகளும் சம்பிரதாயங்களும் பின்பற்றப்பட்டன. அவற்றுள் ஒன்றுதான் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்குத் தரும் சீதனம் என்னும் சடங்கு. தம் மகள் இனி வேறொரு குடும்பத்தில் வாழப் போவதால், பெண் வீட்டார் அவர்களுக்குப் பொன்னையும் பொருளையும் கொடுத்து மகிழ்விப்பார்கள். இது திருமணத்திற்கு முன் நடக்கும் ஒரு வழக்கமாகும். இதுவே இக்காலத்தில் கட்டாய வசூலாக மாறிவிட்டது. இதை வரதட்சணை என்று பெயரிட்டு அழைக்கிறார்கள்.

❸ நெடுங்காலமாகவே வரதட்சணை தீர்க்கப்படாத சமூகச் சிக்கலாக இருந்து வருகிறது. வரதட்சணை தருவதற்குச் சக்தியின்றி எத்தனை குடும்பங்களில் இளம் பெண்கள் திருமணம் செய்துகொள்ளாமலேயே ஏங்கித் தவிக்கின்றனர். பெண் கேட்டு வரும் மாப்பிள்ளை வீட்டாரின் அளவுக்கு அதிகமான வரதட்சணைக் கோரிக்கைக்கு இணங்க முடியாமல் எத்தனையோ திருமணங்கள் பெண் பார்க்கும் படலத்தோடு முடிந்துவிடுகின்றன. அழகும் கல்வியும் நல்ல குணமும் அமையப்பெற்ற போதும் வரதட்சணையில் இணக்கம் காணமுடியாத காரணத்தால் திருமணங்கள் தடைபட்டுவிடுகின்றன. மணமேடை வரை வந்தபிறகும் பல திருமணங்கள் நின்றுபோயுள்ளன. பாதிக்கப்பட்ட பெண்ணின் மனமும், அவளைப் பெற்றெடுத்தவர்களின் மனமும் எவ்வளவு துன்புறும் என்பதை மாப்பிள்ளை வீட்டார் ஏன் எண்ணிப் பார்ப்பதில்லை!

❹ மாப்பிள்ளை வீட்டாரின் வரதட்சணைக் கோரிக்கைக்கு இணங்கி நடைபெறும் திருமணங்களும் மனத்தளவில் பொருத்தமற்றவையாகவே அமைகின்றன. பணத்திற்கு விலை போகும் மாப்பிள்ளையை எந்தப் பெண்தான் விரும்புவாள். அந்த இல்லறத்தில் அன்பு இருக்காது. அவமானம்தான் மிஞ்சும். மக்கள் வாழ்வில் பெருமளவு பகுதி திருமண பந்தத்தை உள்ளடக்கியுள்ளது. எனவே, மக்கள் மனமகிழ்ச்சியுடன் வாழ வேண்டுமென்றால் மனப்பொருத்தத்தை மட்டும் பார்த்து மணமுடிக்க வேண்டும். பணத்திற்கு அங்கே இடமிருக்கக் கூடாது. அப்போதுதான், இல்லறம் நல்லறமாக மிளிரும். வாழ்வும் சிறக்கும்.

❺ ஆகவே, இளைஞர்களே, வரதட்சணை என்னும் கொடிய வழக்கத்தை வேரறுக்க உங்களால்தான் முடியும். எந்நிலையிலும் வரதட்சணை கேட்காதீர்கள். வாழ்வைச் சீர்குலைக்கும் வரதட்சணைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குங்கள்.

கலைமகள் சஞ்சிகை – அக்டோபர் 2006 இதழ் – கட்டுரை: திருமதி த.மனோகரன்

## பனுவல் B

### உள்ளம் என்னும் அரிய சொத்து

நம்முடைய உடலில் உயிர் இருக்கும் வரையில் நம்மோடு தங்கியிருக்கக்கூடிய அரிய சொத்து ஒன்று நம்மிடம் உள்ளது. அதுதான் நம் உள்ளம். அந்தச் சொத்தால் விளையும் பயன்களை நம்முடைய மரணத்துக்குப் பிறகும் சமுதாயத்தின் நன்மைக்காக விட்டுச்செல்ல முடியும்.

***[ — X — ]***

நமக்கு இன்று பயன்படும் அறிவியல் கருவிகள், அறநெறிக் காப்பியங்கள், இன்பம் சேர்க்கும் கலைகள் யாவும் நமக்கு முன்னே வாழ்ந்த சான்றோர்கள் விட்டுச் சென்ற சொத்துக்களே. தங்களுடைய உள்ளம் என்னும் உயர்ந்த மூலதனத்தை அடிப்படையாகக் கொண்டே அந்த ஊக்கமுடைய மனிதர்கள் தாங்கள் ஈடுபட்ட துறைகளில் அரும்பெரும் சாதனைகளைப் புரிந்துள்ளனர். தாமஸ் ஆல்வா எடிசன் கண்டுபிடித்த விளக்கும் அவருடைய எண்ணற்ற மற்றக் கண்டுபிடிப்புகளும் உலக மக்கள் அனைவருக்கும் இன்று பயன்படுகின்றன.

**[ — 10 — ]**

எடிசன் போன்றவர்களுடைய அடிப்படை மூலதனம் உள்ளம்தான். அந்த உள்ளம் தந்த ஊக்கம்தான்; தன்னம்பிக்கைதான்; இடைவிடாத முயற்சிதான் அவர்களுடைய வெற்றியின் இரகசியம். அதேபோல் ஒவ்வொருவரிடத்திலும் உள்ளம் உண்டு. ஆனால், சான்றோர் சாதித்தது போன்று நம்மால் எதையும் சாதிக்க முடிவதில்லை. இந்தக் குறைபாட்டுக்குக் காரணம் நம் உள்ளத்தில் ஊக்கம் இல்லை. அது தன்னம்பிக்கை ஊட்டவில்லை; முயன்று எதையும் செய்வதும் இல்லை.

**[ — 11 — ]**

பலரும் தங்களுடைய பாட்டனாரோ தகப்பனாரோ சேர்த்து வைத்துவிட்டுப் போன சொத்துகளே நிரந்தரமான உடைமை என்றெண்ணி அறியாமையில் வாழ்கின்றனர். பின்னர், ஒருநாள் எல்லாவற்றையும் இழந்து செய்வதறியாது தவிக்கின்றனர். பணமோ பணத்தால் நாம் பெறும் உடைமைகளோ நம்மைவிட்டு நீங்கக்கூடியவை. திருடு போகக்கூடியவை. இயற்கையின் சீற்றங்களாலோ, உலகில் ஏற்படும் அரசியல் பொருளாதார நெருக்கடிகளாலோ, போர்களாலோ நம் செல்வங்கள் யாவும் கணப்பொழுதில் மறைந்துவிடும் தன்மை கொண்டவை. ஆனால், எத்தகைய சோதனைகள் வந்தாலும், இடர்ப்பாடுகள் எதிர்ப்பட்டாலும், நம்மைவிட்டு அகலாத அருஞ்செல்வம் ஒன்று உள்ளது – அதுதான் ஊக்கம் மிகுந்த உள்ளம் என்னும் செல்வம்.

**[ — 12 — ]**

இரண்டாவது உலகப் போரின்போது பர்மாவிலும் மலேசியாவிலும் சேர்த்திருந்த தங்கள் கோடிக்கணக்கான சொத்துகளையும் உடைமைகளையும் விட்டுவிட்டு, உயிர் தப்பினால் போதுமென்று தமிழர்கள் பலரும் தங்களுடைய சொந்த நாட்டுக்கு அகதிகளாகத் திரும்பினர். கால்நடையாகவே பல துன்பங்களை அனுபவித்து வந்துசேர்ந்தவர்கள் ஏராளம். இவர்களில் பலரும் செல்வச் செழிப்பில் சுகபோக வாழ்க்கை

வாழ்ந்தவர்கள். இப்படி எல்லாவற்றையும் இழந்து தாய்நாட்டில் தஞ்சம் புகுந்தவர்களில் பலரும் வறுமையில் உழன்றனர். ஒரு சிலர் மட்டும் புத்துணர்ச்சியோடு புது வாழ்க்கையைத் தொடங்கினர். கடுமையாக உழைத்து இழந்த வாழ்க்கையை மீண்டும் பெற்றனர். இவர்களுக்கு உறுதுணையாக இருந்தது தன்னம்பிக்கை கொண்ட உள்ளம்தான். காலத்தின் கோலம் என்று விதியின் மீது பழியைப் போட்டுத் துவண்டுபோன மனிதர்களிடையே விதியையும் தம் மதியால் வென்ற சாதனையாளர்களும் உண்டு.

**[ — 13 — ]**

இன்று தமிழர்கள் உலகம் முழுதும் பரவியுள்ளனர். தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களையும், கடல் கடந்து மலேசிய, சிங்கப்பூர், கனடா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பெரிய வேற்றுமையை நம்மால் பார்க்க முடிகிறது. தமிழ்நாட்டில் வாழும் தமிழர்கள் சொந்தமாக ஒரு தொழிலோ, வாணிபமோ செய்து முன்னேறத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களிடத்தில் சொந்தக் காலில் நிற்கும் துணிவும் இல்லை; வறுமையை எதிர்த்துப் போராடும் வலிமையும் இல்லை. மாறாக, வேற்று நாடுகளில் குடிபெயர்ந்து வாழும் தமிழர்கள் கல்வி அறிவைப் பெற்று மற்ற நாட்டினரோடு போட்டி போட்டுக்கொண்டு முன்னேறுகிறார்கள். நன்றாகப் படித்தவர்கள் அரசு அலுவலங்களிலோ தனியார் நிறுவனங்களிலோ பணியாற்றுகின்றனர். திறமைகளை வெளிக்காட்டி உயர்ந்த வாழ்க்கை வாழ்கின்றனர். தாய்நாட்டுத் தமிழர்களிடம் அண்டியிருக்கும் வறுமை, வெளிநாட்டுத் தமிழர்களை நெருங்குவதில்லை.

இந்த வேற்றுமைக்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தால், ஓர் உண்மை புலப்படும். அயராத உழைப்பே வெளிநாட்டுத் தமிழர்களின் முன்னேற்றத்திற்கு மூல காரணம். அவர்களுடைய மூலதனமும் அதுதான்.

வெற்றியின் இரகசியங்கள் – ஆசிரியர்: அகிலன், எட்டாம் பதிப்பு, ஜூலை, 1992.

## பனுவல் C

### காந்தியடிகளின் வாழ்க்கைக் கொள்கை

❶ நம் வாழ்க்கையைப் பற்றி எண்ணும் போதெல்லாம் பிறர் வாழ்க்கைக்கு இடையூறு இல்லாத வகையிலேயே எண்ண வேண்டும். நம் வாழ்க்கையை நடத்தும்போதும் பிறர் நன்மையைக் கருத்தில் கொண்டே நடத்த வேண்டும். உலகப் பெரியோர்களின் தனிவாழ்க்கை, சமுதாய வாழ்க்கை இரண்டிலும் இந்த உண்மையைக் காணலாம். இந்தக் கொள்கையைப் பெரிய பெரிய துறைகளில் மட்டும் கைக்கொண்டு, சிறு சிறு கடமைகளில் நெகிழ்ந்திருப்பதும் கூடாது. சிறு தவறே பெருந்துன்பங்களுக்குக் காரணமாவது கண்கூடு.

❷ இந்தியர்களின் அரசியல் உரிமைக்காக வாழ்க்கையைத் தியாகம் செய்த காந்தியடிகள், மாபெரும் கூட்டங்களிலும் சிறு சிறு கடமைகளை வற்புறுத்தாமல் விடுவதில்லை. எழுதும்போதும் அவ்வாறே வற்புறுத்தி வந்தார். தெருவில் வாழைப்பழத்தோலைப் போடும் பொறுப்பற்ற செயலையும் கடிந்து திருத்துவார்; கண்ட இடமெல்லாம் எச்சில் துப்பித் தூய்மையைக் கெடுக்கும் அநாகரிகப் பழக்கத்தையும் கடிந்து திருத்துவார். இவ்வாறு அவர் திருத்திய போதெல்லாம், எல்லாரும் இனிது வாழ வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளையும் பிறர்க்கு இடையூறு இல்லாத வகையில் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்ற சிறந்த கொள்கையையும் காணலாம். இதுவே எல்லாருக்கும் ஒத்த உரிமை நல்கும் பெருந்தன்மை; உரிமை வாழ்க்கைக்கு அடிப்படையான சிறந்த பண்பு.

❸ மற்றவர்களின் உரிமைக்கு இடர் விளைக்கின்றவன் உரிமையுணர்வே இல்லாதவன். உரிமை என்பது கொடுக்கும் அளவே கொள்ளப்படுகின்ற பொருள். பிறர்க்கு உரிமை கொடுக்காமல், தான் மட்டும் உரிமையோடு வாழ முயல்கின்றவன் உரிமையாளன் அல்ல; கொடுங்கோலன் என்பதே அவனுக்குப் பொருந்தும் பெயர். சமய உணர்வு நிறைந்து தொண்டே வாழ்வாகக் கொண்டிருந்த காந்தியடிகள் ஒவ்வொரு துறையிலும் இந்த உரிமையுணர்வைப் போற்றி வாழ்ந்தார். அதனால்தான், எந்தக் கோயிலில் தாழ்த்தப்பட்டோருக்கு இடம் இல்லையோ அந்தக் கோயிலில் தாம் நுழைவதில்லை என்று நோன்பு கொண்டார். தாம் பெறும் உரிமை மற்றவர்களுக்கு இருக்க வேண்டும் என்ற பொதுநல உணர்வு மிக்கவராக வாழ்ந்து காட்டியவர் காந்தியடிகள்.

❹ ஆடம்பர வாழ்க்கை அவருக்கு எப்போதும் வெறுப்பையே உண்டாக்கியுள்ளது. காசியில் ஒரு பல்கலைக் கழகத்தின் தொடக்கவிழாவில் பேசிய பேச்சாளர்கள் வறுமையைப் போக்க வேண்டும் என்று மனமுருகிப் பேசினார்கள். ஆனால், சிறப்பு விருந்தினரோடு உடன் இருந்தவர்களின் ஆடம்பரத் தோற்றமோ அதற்கு நேர்மாறாக இருந்தது. காந்தியடிகள் பேசும் வாய்ப்பு வந்தபோது, அவர் இந்த முரண்பாட்டைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. “உங்கள் உடம்பில் இருக்கும் அணிகலன்களை எல்லாம் கழற்றிச் சேர்த்து மக்களின் பொதுச் செல்வம் என்று உணர்ந்து ஒதுக்குங்கள். இல்லாவிடில் இந்தியா முன்னேற வழி இல்லை,” என்று வெளிப்படையாகக் கூறினார்.

❺ ஆடம்பரத்தில் வேட்கை உள்ளவனோ, அல்லது உலகம் மதிக்க வேண்டும் என்று ஆசை கொண்டவனோ உண்மையாக அறநெறியில் நடக்க முடியாது என்று அவர் தம்முடைய சுயசரிதையில் எழுதியுள்ளார். அவ்வாறே அவர் வாழ்க்கையில் ஒவ்வொரு துறைகளில் ஆடம்பரமின்றி வாழ்ந்ததைக் காணலாம். தம் மக்களுக்குத் திருமணம் நடத்திய காலத்திலும், மிகச் சிலரை மட்டும் வரவழைத்து மிக எளிய முறையில் சுருங்கிய சடங்குகளோடு திருமணத்தை நடத்தி ஒப்பற்ற வழிகாட்டியாக விளங்கினார்.

❻ அறநெறியை அடிப்படையாய்க் கொண்ட குடியாட்சி மட்டுமே மக்களுக்குப் பயன்படும். அவ்வாறு இல்லாத குடியாட்சி தடியாட்சியைவிட *[ — X — ]* என்பது காந்தியடிகளின் கருத்தாகும். மக்களின் வாழ்க்கையிலும் **[ — 24 — ]** அற்ற பண்பு இருந்தாலொழிய வாழ்க்கையில் அமைதியும் இன்பமும் பெற வழியில்லை என்பதை **[ — 25 — ]** நம்பினார் காந்தியடிகள். அதனால், பிறருக்குச் சேவை செய்ய வேண்டிய **[ — 26 — ]** எல்லாரும் உணர வேண்டும் என்றும், தமக்கென மட்டும் பணம் சேர்ப்பது பெரிய பாவம் என்ற உண்மையைக் கண்டு **[ — 27 — ]** வேண்டும் என்றும் பேசியும் எழுதியும் வந்தார்.

❼ இவ்வாறு தம்முடைய தனிவாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் மக்கள் நலனைப் பேணும் உயர்ந்த கொள்கைகளை உறுதியாகப் பின்பற்றிய காந்தியடிகள் இந்தியாவின் ‘தேச பிதா’ என்று போற்றப்பட்டது சாலப் பொருந்தும்.



மகாத்மா காந்தி – மு. வரதராசனார் (ஆறாம் பதிப்பு – ஜூலை 1965)

## பனுவல் D

### சிறுவயது தொழிலாளர்கள்

இன்று துரித வளர்ச்சி காணும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஆனால், அதிக எண்ணிக்கையில் சிறுவர்களைத் தொழிலாளர்களாகக் கொண்டுள்ள நாடாகவும் அது உள்ளது என்பது மறுக்க முடியாத கசப்பான உண்மையாகும். இச்சிறார்கள் ஆறு வயது முதல் பதினான்கு வயதுக்குட்பட்டவர்களாகும். விளையாடவும் பள்ளி சென்று படிக்கவும் வேண்டிய வயதில் இவர்கள் உழைக்கக் காரணம் என்ன?

இந்தப் பிரச்சினை பற்றிச் சிலர் தங்கள் கருத்துகளைக் கூறியுள்ளனர்.

**ஓய்வுபெற்ற ஆசிரியர் கதிரேசன்**

வறுமையே குழந்தைத் தொழிலாளர்கள் உருவாவதற்கு அடிப்படைக் காரணம். ஏழைக் குடும்பத்தில் பிறக்கும் இவர்களுக்குக் கல்வியறிவு கிடைப்பதில்லை. அவர்களுடைய பெற்றோர் சிறு வயதிலேயே அவர்களைக் கூலி வேலை செய்ய அனுப்பிவிடுகின்றனர். மேலும், பல கிராமங்களில் பள்ளிக்கூட வசதிகள் இல்லாதபோது பிள்ளைகளை வேலைக்கு அனுப்புவதே சிறந்தது எனப் படிப்பறிவு இல்லாத மக்கள் எண்ணிவிடுகின்றனர். முதலில், கல்வியைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே பரவச் செய்ய வேண்டும். இந்தப் பிரச்சினை தானாகத் தீர்த்துவிடும்.

**அரசாங்க அதிகாரி, திரு முரளிதரன்**

1991- ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நம் நாட்டில் சுமார் பதினோரு மில்லியன் உழைக்கும் சிறார்கள் உள்ளனர் என்பது அதிர்ச்சி தரும் உண்மையாகும். பெற்றோரின் அறியாமையும், சிறு தொழில் செய்வோரின் சுயநலப் போக்கே இந்த அவலத்துக்கு முக்கியக் காரணமாகும். அரசாங்கம் குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிராகச் சட்டத்தை இயற்றியுள்ளது. ஆனால், நாடு முழுவதும் பல இடங்களில் பரவலாகச் சட்ட விரோதமாக இது நடக்கிறது. தவறு செய்பவர்களும் வெகு சாமர்த்தியமாகச் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிடுகின்றனர். தற்போதைய தொழில், வேலை வாய்ப்பு நெருக்கடியில் படிப்பில் காலத்தை வீணாக்குவதைவிடத் தங்கள் பிள்ளைகள் ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ளட்டும் என்று ஏழைப் பெற்றோர் எண்ணுவதாக ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

**சமூகத் தொண்டர், திரு சாமுவேல்**

வறுமையும் பாதுகாப்பற்ற சமூகப் பின்னணியும் சிறுவர்களைத் கொத்தடிமைகளாக்கும் அவலம் நம் நாட்டை அலைக்கழிக்கிறது. பெற்றோர் சிலர் கடன் பட்டு அத்தொகையைக் கட்டித் தீர்க்க முடியாமல், தங்கள் பிள்ளைகளைக் கடன்பட்டவர்களிடம் வேலை செய்ய அனுப்புகிறார்கள். இளம் சிறார்கள் பட்டாசுத் தொழிற்சாலைகளிலும், பண்ணைகளிலும், உணவு அங்காடிகளிலும் வேலை செய்வது பலரும் அறிந்த உண்மையாகும். இதைக் கண்டும் காணாமல் இருப்போரின் அலட்சியப் போக்கு கண்டிக்கத்தக்கது. இந்தக் குற்றங்களைச் செய்பவர்களுக்கு அரசாங்கம் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும். மனசாட்சிக்குப் பயப்படாதவர்கள் கடும் தண்டனைக்காவது பயப்படுவார்கள்.

கலைமகள் சஞ்சிகை – ஜூலை 2004 பதிப்பு – கட்டுரை: சிறுவயது தொழிலாளர்கள்